**பகுதி-4(மதிப்பெண்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

38.அ.பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுது. (அல்லது)

ஆ.தூது அனுப்பத்தமிழே சிறந்தது தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்குக.

39.அ.உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம்.

(அல்லது)

ஆ.பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

40.அ.நீவிர் பாராட்டு பெற்ற சூழல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ.மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?" Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord". "How can you be so sure?" asked Akbar. Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere". Akbar was pleased very much by Birbal's wit.

41.உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி – 21)விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.

42.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**பகுதி – 5**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** 2× 3 =6

43.அ.நீரின்று அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி. (அல்லது)

ஆ.அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள்.

44.அ.தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. (அல்லது)

ஆ.நூலகம் , நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

45.அ.பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

முன்னுரை – மழைநீர் – மழைநீர்சேமிப்பு – சேமிக்கும் முறைகள் – பயன்கள்– மரம் வளர்ப்போம்–முடிவுரை (அல்லது)

ஆ.பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

முன்னுரை – பெண்கல்வி – பெண்சாதனையாளர்கள் – முத்துலட்சுமி – மூவலூர் இராமாமிர்தம் –சாவித்திபாய் பூலே – மலாலா –முடிவுரை

ஆக்கம் :ச.சேட்டு மதார்சா,ஈரோடு



**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடு.**

**முதல் திருப்புதல் தேர்வு – 2023**

**9ஆம் வகுப்பு–தமிழ்**

**காலம் :2.30மணி** **மதிப்பெண்:100**

**பகுதி–1(மதிப்பெண் : 15)**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1.பணத்தாளில் தமிழ் மொழி இடம்பெற்றுள்ள பிறநாடுகள்

அ.மொரிசியஸ் , இலங்கை ஆ.மலேசியா , சிங்கப்பூர்

இ.பர்மா , பிஜித்தீவு ஈ. கயானா,மடாஸ்கர்

2. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்த காலமும் நிலையாய் இருப்பது தமிழே! – இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ.முரண்,எதுகை,இரட்டைத்தொடை

ஆ.இயைபு,அளபெடை,செந்தொடை

இ.மோனை . எதுகை, இயைபு ஈ.மோனை , முரண் , அந்தாதி

3.**மல்லல்** மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ.மறுமை ஆ.பூவரசு மரம் இ.வளம் ஈ.பெரிய

**4.பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.**

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக-----------------.

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும்-----------.

அ. வந்தான் , வருகிறான் ஆ. வந்துவிட்டான் , வரவில்லை

இ.வந்தான் , வருவான் ஈ.வருவான் , வரமாட்டான்

5.சொற்றொடர்களை முறைப்படுத்துக.

அ.ஏறுதழுவுதல் என்பதை ஆ.தமிழ் அகராதி இ.தழுவிப்பிடித்தல் என்கிறது.

1. ஆ–அ–இ 2.ஆ–இ–அ 3.இ–ஆ–அ 4.இ–அ–ஆ

6.ஐம்பெருங்குழு,எண்பேராயம் சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ.திசைச்சொற்கள் ஆ.வடசொற்கள்

இ.உரிச்சொற்கள் ஈ.தொகைச்சொற்கள்

7.தமிழக அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ.தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ.ஊரகத்திறனாய்வுத்தேர்வு

இ.தேசியத் திறனறி , கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ.மூன்றும் சரி

8.ஒன்றறிவதுவே உற்றிவதுவே இரண்டறிவதுவே அதனொடு நாவே – இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?

அ.நுகர்தல் ஆ.தொடுவுணர்வு இ.கேட்டல் ஈ.காணல்

9.இசை, குறிப்பு,பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும் சொற்கள்

அ.பெயர்சொல் ஆ.வினைச்சொல் இ.உரிச்சொல் ஈ.இடைச்சொல்

www.Padasalai.Net

10.பொருத்துக.

அ.சிறுபஞ்சமூலம் - 1.காப்பிய இலக்கியம் ஆ.குடும்ப விளக்கு -2.சங்க இலக்கியம்.
இ.சீவக சிந்தாமணி -3.அறஇலக்கியம் ஈ.குறுந்தொகை -4.தற்கால இலக்கியம்

1.அ-3 , ஆ-4 , இ-1 , ஈ-2 2.அ-2 , ஆ-3 , இ-1 , ஈ-4
3.அ-3 , ஆ-1 , இ-4 , ஈ-2 4.அ-4 , ஆ-1 , இ- 2, ஈ-3

11.இந்தியாவில் முதன்முதலாகப் பெண்களுக்கான பள்ளி தொடங்கப்பட்டமாநிலம் எது?

அ.தமிழ்நாடு ஆ.குஜராத் இ.மராட்டியம் ஈ.கேரளா

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும் கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்பூமிக்கு ஒன்றும் பாரமில்லை
பாய்ந்து பரவும் இளைய நதிகளே பள்ளம் நிரப்ப வாருங்கள்
காய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும் கதிர்கள் சுமந்து தாருங்கள்

12.இப்பாடலடியைப் பாடியவர் யார்?

அ.பாரதிதாசன் ஆ.சேக்கிழார் இ.வைரமுத்து ஈ.தொல்காப்பியர்

13.இப்பாடலில் அமைந்துள்ள அடிஎதுகையைத் தேர்ந்தெடுக்க.

அ.பாய்ந்து – காய்ந்து ஆ.முளைக்கும் – முளைக்க
இ.காய்ந்து – கதிர்க ஈ.இருக்கும் –இளைய

14.கழனி என்பதன் பொருள் யாது?

அ.குளம் ஆ.வயல் இ.நதி ஈ.கிளி

15.இப்பாடலடி இடம்பெறும் நூல் எது?

அ.கள்ளிக்காட்டு இதிகாசம் ஆ.வைரமுத்து கவிதைகள் தொகுப்பு
இ.தொல்காப்பியம் ஈ.புறநானூறு

**பகுதி-2 (மதிப்பெண்:18)**

**பிரிவு-1 4 ×2= 8**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**(வினா எண்.21 கட்டாய வினா)**

**17.விடைக்கேற்ற வினா அமைக்க.**

அ.சங்க இலக்கியமான கலித்தொகையில் ,ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ.திராவிட மொழிகளுள் மூத்தமொழியாக விளங்குவது தமிழ்மொழி.

18.கண்ணி என்பதன் விளக்கம் யாது?

19.சாரதா சட்டம் எதற்காகப் போடப்பட்டது?

20.பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

21.தரும் என முடியும் திருக்குறள்.

பிரிவு-2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**5 × 2 =10

22.இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

அ.சுடர்க்கொடி பாடினாள்.மாலன் பாடினான்.
ஆ.பெரும் மழை பெய்தது.வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

23.ஒரே சொல்லால்தொடரின் இரு இடங்களை நிரப்புக.(விலங்கு,அகல்,கால்)

அ.எண்ணெய் ஊற்றி ---விளக்கு ஏற்றியவுடன்,இடத்தை விட்டு ----
ஆ.எனக்கு---பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம் பார்த்து
உன் ------ஐ வை.

24.பகுபத உறுப்பிலக்கணம் தருக. “பரப்புமின்“

25.கலைச்சொல் தருக. 1.hero stone 2.missile

26.தொடர்களை மாற்றி உருவாக்குக.

அ.நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார்.(பிறவினைத் தொடராக மாற்றுக.)
ஆ.உண்ணப்படும் தேனே! (செய்வினைத் தொடராக மாற்றுக.)

27.தொடரைக் கொண்டு பழமொழியை நிறைவு செய்க.

அ.கற்றோருக்குச் சென்ற ---- ஆ.கல்லாடம் படித்தவரோடு -----

28.சொல்லுக்குள் சொல்லை எழுதுக. 1.ஆற்றங்கரையோரம் 2.தமிழ்விடு தூது

**பகுதி-3(மதிப்பெண்:18)**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2× 3 =6

29.அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

30.பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச்சேவைகளை எழுதுக

**31.பின்வரும் உரைப்பத்தியைப் படித்து விடையளிக்க.**

குளித்தல் என்ற சொல்லுக்கு உடம்பினைத் தூய்மை செய்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பதல்ல பொருள்.சூரியவெப்பத்தாலும் உடல்உழைப்பாலும் வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே அதன் பொருளாகும்.குளிர்தல் என்பதே குளித்தல் என்று ஆயிற்று.குள்ளக் குளிர குடைந்து நீராடி என்கிறாள் ஆண்டாள்.தெய்வச்சிலைகளைக் குளிர்விக்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்

1.குளித்தல் என்ற சொல்லின் பொருள் யாது?2.திருமஞ்சனம் ஆடல் என்றால் என்ன?
3.இவ்வுரைப் பத்திக்கேற்ற தலைப்பொன்று எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.(34 ஆவது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க)** 2× 3 =6

32.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

33.விதைக்காமலே முளைக்கும் விதைகள் – இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

34.அ.ஒன்றறி எனத்தொடங்கும் தொல்காப்பியர் பாடல். (அல்லது)
ஆ.பூவாது எனத்தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடல்.

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2× 3 =6

35.அலகிட்டு வாய்பாடு கூறுக.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

36.தன் வினை,பிறவினை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக்காட்டுக.

37.உவமை அணியை சான்றுடன் விளக்குக.

www.Padasalai.Net